**அபிவிருத்தி லொத்தர் சபை - 2019**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அபிவிருத்தி லொத்தர் சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புக்கள், முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்புடைய தரப்பினரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, சபையின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது சபையினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு விடயப்பரப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை

காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் நிறுவகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான அற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் நிதியத்தின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இயலக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, கட்டமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதாக;

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது சபையின் கட்டுப்பாட்டு சபையினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க நிதியம் செயற்பட்டுள்ளதாக,

- தமது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.

- வளங்கள் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமான கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான ‘‘சிறந்த முறையில் திட்டமிடப்பட்ட’’ உள்ளகக் கணக்கீட்டு முறைமையொன்று சங்கத்தினால் பேணப்படல் அவசியமானது ஆகும். பொதுப் பேரேடு, நாளேடுகள்,

நாளேட்டுக் குறிப்புகள், பொடுப்பனவு உறுதிச்சீட்டுகள் போன்ற பிரதான கணக்கீட்டுக் குறிப்புகளை பேணுவதுடன் தொடர்புடைய கணக்காய்வு அவதானிப்புகள் பின்வரும் தலைப்புகளின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 1.5.2 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| உரிய நியமத்துடனான இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| **<u>இ.க.நி.07</u>**<br>இடர் கடன் தவணைகளின் பெறுவனது ரூபா 15,057,390 மற்றும் இடர்கடன் செலுத்தல்கள் ரூபா 29,515,488 காசுப் பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் தனித்தனியாக காண்பிக்கப்படாது செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் சீராக்கப்பட்டிருந்தது. | இணங்குகின்றேன். எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டியமை. |

### 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த கணக்குகளின் பிரகாரம் நடைமுறை வேலைகள் மற்றும் முற்பணங்களாக காண்பிக்கப்பட்டுள்ள ரூபா 1,583,595 மற்றும் ரூபா 2,074,958 ஆன தொகை 2014 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டு வரப்படும் மீதியொன்றாக காணப்படுவதுடன் அவை நிறுத்தப்பட்ட நிர்மாணங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் ஆகும்.அந்த பெறுமதிக்காக கணக்குகளில் உரிய சீராக்கங்களை மேற்கொள்ளாது 05 வருடங்களாக தொடர்ந்தும் கணக்குகுளில் முன்கொண்டு வரப்பட்டவாறு காணப்பட்டது. மேலும் | இணங்குகின்றேன். இந்த பணிகள் இதுவரையிலும் இடைநிறுத்தப்பட்டுள்ள மையால் மீண்டும் கணக்கு குறிப்புக்களின் மூலம் திருத்துதுல் முடியாது ரூபா 2,074,958 ஆன தொகை வெளிவாரி முற்பணக் கணக்கில் பதிவு செய்யப்பட்டுள்ளது. | கணக்குகளில் உரிய சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | கைவிடப்பட்ட நிர்மாணங்களுக்காக ரூபா 1,325,805 தொகையானது ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களாக கணக்கு வைக்கப்பட்டிருந்ததுடன் குறித்த பெறுமதி சொத்துக்கள் கணக்குகளிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக அந்த சொத்துக்களின் பெறுமதி கூட்டிக் காண்பிக்கப்பட்டிருந்தன. | | |
| (ஆ) | சபைக்கு உரித்தற்ற காணியொன்றில் மேற்கொள்ளப்பட்ட நிர்மாண பணியொன்றுக்காக செலவிடப்பட்ட ரூபா 492,392 ஆன தொகை காணிகள் மற்றும் கட்டிடங்களின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருந்த போதிலும் அந்த தொகை திசமராம பிரதேச செயலகத்திடமிருந்து பெற வேண்டிய தொகையொன்றாக அவதானிக்கப்பட்டது. அதன் காரணமாக ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 492,392 ஆல் கூடுதலான முறையில் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நடைமுறைச் சொத்துக்கள் அந்த அளவினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | இணங்குகின்றேன். இந்த காணிகள் தொடர்பில் இறுதி தீர்மானத்திற்கு வர முடியாமையால் குறித்த சொத்துக்கள் கணக்குகளில் அகற்றுவதற்கு அல்லது பெற வேண்டிய தொகையாக பதிவு செய்யமுடியாதிருந்தது. | உரிய ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் போது பணிகள் ஆரம்பிக்கப்பட்டிராத விடயங்களுக்காக 2020 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,421,842 ஆன தொகை | இணங்குகின்றேன். இந்த பணி 2020 ஆம் ஆண்டு அளவில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளமை. | உரிய ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்குகளில் சீராக்கம் மேற்கொள்ளப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | மீளாய்வாண்டின் நடைமுறை வேலை மற்றும் கடன்கொடுத்தோராக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | நிதிக்கூற்றுக்களினுள் காண்பிக்கப்படும் இறுதி இருப்பு பெறுமதி ரூபா 2,853,172 ஆன பயன்படுத்த முடியாத இருப்பின் தொகுதியொன்று உள்ளடக்கப்பட்டிருந்த மையால் இறுதி இருப்பு அந்த பெறுமதியால் கூட்டிக் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்ளப்பட்டு ள்ளது. | இறுதி இருப்பினுள் பயன்படுத்த முடியாத இருப்பின் பெறுமதி அகற்றப்பட வேண்டியமை. |
| (உ) | விளம்பர வாகனமொன்றை நிர்மாணிப்பதற்காக மேலும் செலுத்த வேண்டியதாக உள்ள ரூபா 1,515,300 ஆன தொகை கணக்கு வைக்கப்படாதிருந்ததுடன் அந்த பெறுமதியில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் ஆகிய செலுத்த வேண்டிய செலவினங்கள் கணக்குகளில் மீதிகள் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. | கணக்குகளில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டியமை |

**1.5.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்படும் ரூபா 732,951 பெறுமதியான கடன் வருடங்களின் லொத்தர் சீட்டுக்களின் அச்சீட்டு செலவினக் கணக்கின் மீதி தொடர்பில் உரிய சான்றுப்படுத்தல் இல்லாதிருந்த காரணத்தால் அந்த விடயத்தை திருப்திகரமாக சான்றுப்படுத்தவோ | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. பேரேட்டு குறிப்புக்களை சமர்ப்பிப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. | பேரேட்டு குறிப்புக்களை சான்றுப்படுத்தும் தேவைப்பாடுடைய ஆவணங்கள் மற்றும் செலவின விபரங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | மெய்மையாய்விற்கு உட்படுத்தவோ முடியாதிருந்தது. | | |
| (ஆ) | மீளாய்வாண்டிற்கு உரிய சபையின் பணிப்பாளர் சபை பத்திரம் மற்றும் பணிப்பாளர் சபை தீர்மானங்கள் உரிய முறையில் நிறைவேற்றப்பட்ட பின்னர் மிகவும் துரிதமாக கணக்காய்விற்கு வழங்கப்பட வேண்டும் என 2016 ஆம் ஆண்டு முதல் பல்வேறு கணக்காய்வு ஐய வினாக்கள் மற்றும் தகவல் கோரல் கடிதங்கள் மூலம் கோரப்பட்டிருந்த போதிலும் அந்த தகவல்களை துரிதமாக கணக்காய்விற்கு வழங்கும் பணிகள் மேற் கொள்ளப்பட்டிருக்க வில்லை. அவ்வாறே அந்த காலப்பகுதியினுள் நடாத்தப்பட்ட கணக்காய்வு குழு கூட்டங்களின் போது இந்த நிலைமை சீராக்கப்படுவதாக இணங்கியிருந்த போதிலும் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | இணங்குகின்றேன். | பணிப்பாளர் சபை பத்திரங்கள் மற்றும் தீர்மானங்கள், உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு தாமதமின்றி கணக்காய்விற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

## 1.6 பெறவேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய பணம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | லொத்தர் சீட்டுக்களின் விற்பனையை மேம்படுத்துவதற்காக பரிசில்களாக வழங்குவதற்கு கொள்வனவு செய்யப்பட்ட 2 மோட்டார் வாகனங்கள் 01 மோட்டார் சைக்கிள் ஆகியவை காட்சி வாகனங்களாக விற்பனை முகவர்களுக்கு | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. | ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்கு வைத்தல் மற்றும் கணக்குகளில் உரிய சீராக்கங்களை மேற்கொள்ளல். |

| | | | |
|---|---|---|---|
| | வழங்கியிருந்ததுடன் அந்த காட்சிப்படுத்தல் காலப்பகுதியினுள் அந்த வாகனம் விபத்துக்குள்ளாகிய மையால் ரூபா 236,608 ஆன நட்டம் ஏற்பட்டிருந்தது. அந்த நட்டத்தினை விற்பனை முகவர்களிடம் அறவிடுமாறு சபையினால் கணக்காய்விற்கு அனுப்பப்பட்டிருந்த பதிலில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அவற்றுள் ரூபா 177,667 மாத்திரம் பெற வேண்டிய மீதிகளாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது. எஞ்சிய ரூபா 58,941 ஆன தொகை பெற வேண்டிய மீதியாக கணக்கு வைக்கப்பட்டிருக்க வில்லை. இவற்றுள் 2019 ஆம் ஆண்டினுள் ரூபா 12,566 மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | சபையினால் பொக்செல் வீதியில் இலக்கம் 234 இல் அமைந்துள்ள கட்டிடத்தினை வாடகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்காக கைச்சாத்திடப்பட்டிருந்த உடன்படிக்கை ஒரு தரப்பினரால் மீறப்பட்ட காரணத்தால் வைப்புத் தொகையாக செலுத்திய ரூபா 723,780 மற்றும் ஆண்டிற்காக செலுத்திய வாடகைப் பணத்தின் ஒரு பகுதியான ரூபா 4,252,440 ஆகிய தொகைகளின் கூட்டுத் தொகையான ரூபா 4,976,220 இற்றைக்கு 15 வருடங்களாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. இது தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு நிதி அமைச்சின் மூலம் குழுவொன்று நியமிக்கப்பட்டிருந்த துடன் அதன் பரிந்துரைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | நீண்டகாலமாக அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவிடுவதற்கு அல்லது அவற்றை உரிய முறையில் தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | சபையின் பயன்பாட்டிற்காக பெற்றுக் கொள்ளப்பட்ட கட்டிடமொன்றிற்காக சபையினால் வெளித்தரப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 2,520,000 ஆன கட்டிட வாடகை வைப்பு பணத்தை மீள அறவிட்டுத் தருமாறு கோரி சபையினால் 23 வருடங்களுக்கு முன்னர் தொடுக்கப்பட்டிருந்த வழக்கின் தீர்ப்பு 2016 சனவரி 11 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்தது. அந்த தீர்ப்பின் பிரகாரம் குறித்த பணத்தை அறவிட வேண்டிய போதிலும் தீர்ப்பு வழங்கப்பட்டு 03 வருட காலம் கடந்துள்ள போதிலும் குறித்த பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | ஏற்றுக் கொள்கின்றேன். இந்த வைப்புத் தொகையினை பெற்றுக் கொள்வதற்கு சட்ட அலுவல்கள் சட்டமா அதிபர் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டது என்பதும் இதுவரையிலும் பணிகள் பூர்த்தி செய்யப்படவில்லை என்பதும் | - மேற்படி - |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

---

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் VIII அத்தியாயத்தின் 4.1 பந்தி – | கள உத்தியோகத்தர்களுக்கு மேலதிக நேர படிகளை பெற்றுக் கொள்ளும் உரித்து இல்லாத உத்தியோகத்தர்களாக குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் சபையின் கள உத்தியோகத்தர் களுக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 1,122,318 ஆன மேலதிக நேர படிகள் செலுத்தப்பட்டிருந்தன. | ஏற்றுக்கொள்கின்றேன்இந்த கள உத்தியோகத்தர் களின் அரச விடுமுறை தினங்களில் கடமைகளை விருப்புடன் மேற்கொள்வதற்காக விடுமுறை தினங்களில் மேலதிக நேர படிகள் செலுத்தப்படுவதுடன் எதிர்காலத்தில் அரச விடுமுறை தினங்களில் அந்த சேவையின் தேவை உள்ளமையால் | ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | | அந்த பிரச்சினை 2019.11.01 ஆந் திகதி நிதி அமைச்சின் அங்கீகாரத்திற்காக அனுப்பப்பட்டுள்ளது. குறித்த அங்கீகாரம் இதுவரையிலும் கிடைக்கப்பெற வில்லை. | |
| – | பதவி நிலை உத்தியோகத்தர்களுக்கு 1/20 கொடுப்பனவினை பெற்றுக் கொள்வதற்காக தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் 08 மணித்தியாலங்கள் கட்டாயமாக கடமைகளில் ஈடுபட வேண்டிய போதிலும் சபையினால் இந்த ஏற்பாடுகளை கருத்திற் கொள்ளாது விடுமுறை தினங்களில் பதவிநிலை உத்தியோகத்தர்கள் பணியாற்றிய மணித்தியாலங்களின் அடிப்படையில் மணித்தியாலமொன்றிற்கு ஒன்றரை மணித்தியாலம் எனும் விகிதாசாரத்தில் மேலதிக நேர படிகள் செலுத்தப்பட்டிருந்தன. மேலும் அந்த திகதிகளில் பதவி நிலை உத்தியோகத்தர்கள் சீட்டிழுப்பு பணிகளில் பங்குபற்றுவதற்கான கொடுப்பனவுகளையும் பெற்றுக் கொண்டிருந்தனர். | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது இந்த படி 17 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக செலுத்தப்பட்டுள்ளது 04 மணித்தியால சேவை தேவைப்பாடு நிலவும் சந்தர்ப்பத்தில் 08 மணித்தியாலங்கள் சேவையில் நிறுத்தி கொடுப்பனவுகளை மேற்கொள்ளல் சபைக்கு பொருளாதார ரீதியில் சிறந்த பலனை அளிக்காமையால் அவ்வாறு மேற்கொள்ளப் பட்டுள்ளது. | தாபன விதிக் கோவையின் பிரகாரம் செயற்பட வேண்டியமை. |

**(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை**

| | | | | |
|---|---|---|---|---|
| (i) | நிதிப்பிரமாணம் 272(3) | அனைத்து கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்களும் அவற்றுக்கு உரிய மாதம் நிறைவடைந்த நாள் முதல் 6 வாரங்கள் எனும் உச்ச காலம் கடப்பதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும் சபையினால் மீளாய்வாண்டிற்கான கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் 1 முதல் 7 மாதங்கள் வரையான தாமதத்தின் பின்னரே கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | ஏற்றுக் கொள்கின்றேன். எதிர்காலத்தில் திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (ii) | 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கை மூலம் திருத்தப்பட்ட நிதிப் பிரமாணம் 371(2)(ஆ) | – ஒரு சந்தர்ப்பத்தில் வழங்கப்படக் கூடிய உச்ச செயல் நிமித்த கட்டுநிதி ரூபா 100,000 ஆன போதிலும் மீளாய்வாண்டில் 20 சந்தர்ப்பங்களில் உச்ச எல்லையை விஞ்சி ரூபா 3,481,827 ஆன கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்ள முடியாது. ரூபா 100,000 எல்லையை விஞ்சி கட்டுநிதிகள் வழங்கப்படும் சந்தர்ப்பத்தில் தலைவர் / பொது முகாமையாளரின் விசேட அங்கீகாரம் உள்ளக மெமோ ஒன்றின் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டமை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| | | – பதவி நிலைத் தரத்திலான உத்தியோகத்தர்களுக்கு மாத்திரம் உப கட்டுநிதி வழங்கப்பட வேண்டிய போதிலும் 2019 ஆம் ஆண்டினுள் ரூபா 10,727,741 பெறுமதியான கட்டு நிதி பதவிநிலைத் தரமற்ற | நடைமுறைக்கு சாத்தியமான மற்றும் நேரடியாக தாக்கம் செலுத்தும் செயற்திட்டங்களுடன் தொடர்பு படாமை காரணமாக அந்த உப கட்டுநிதி பெற்றுக் கொள்ளப்பட்ட பணத்தினை | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. | தீர்க்கும் போது நடைமுறை ரீதியிலான பிரச்சினைகள் உருவாக கூடும் என்பது. | |
| | | – | செயல்நிமித்த உப கட்டுநிதி செலுத்தும் போது அந்த பணிகளுக்கு உரிய மதிப்பீடுகளை உரிய முறையில் தயாரிக்காமையால் மீளாய்வாண்டின் போதும் 219 சந்தர்ப்பங்களில் ரூபா 1,680,806 ஆன சேமிப்புக்கள் அறிக்கையிடப்பட்டிருந்தன. | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. அவசரமான சந்தர்ப்பங்களில் மதிப்பீடுகளை தயாரிக்காததுடன் பதவிநிலை உத்தியோகத்தர்களின் அவதானிப்புக்கள் மற்றும் அங்கீகாரத்தின் கீழ் கொடுப்பனவு மேற்கொள்ளப்படும் என்பது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (iii) | நிதிப் பிரமாணம் 371(2)(இ) | – | ஏதேனும் திட்டவட்டமான பணியொன்றுக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணங்கள் அந்த பணி நிறைவடைந்தவுடன் உடனடியாக தீர்க்கப்பட வேண்டிய போதிலும் 2019 சனவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரையிலும் 12 சந்தர்ப்பங்களில் ரூபா 650,500 ஆன முற்பணம் 18 மற்றும் 47 நாட்களுக்கு இடைப்பட்ட காலத்தினுள் தீர்ப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. இந்த தவறை திருத்துவதற்கு பணிகள் முன்னெடுக்கப் பட்டுள்ளதுடன் முற்பணம் தீர்க்கப்படாத சந்தர்ப்பமொன்றில் மீண்டும் முற்பணம் வழங்கப்பட மாட்டாது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (இ) | 2018 திசெம்பர் 31 ஆந் திகதிய நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் செயலாளரின் 4/2018 ஆம் இலக்க சுற்றறிக்கையின் மூலம் அறிமுகப்படுத்தப் பட்டுள்ள | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | நிதியல்லாத சொத்துக்களின் மதிப்பீடு செய்வதற்கான வழிகாட்டல் கோவை | | | |
| (i) | 1.1.1 பந்தி | சபைக்கு சொந்தமான அனைத்து வாகனங்களும் மதிப்பீடு செய்யப்பட வேண்டிய பொதிலும் ரூபா 8,958,763 பெறுமதியான 44 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் 2009 ஆம் ஆண்டின் போது ரூபா 7,882,371 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட கைஹொண்டாய் ரக மோட்டார் வாகனம் ஆகியவற்றுக்கு மதிப்பீட்டு பெறுமதிகள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. 18 மோட்டார் சைக்கிள்களை கைதவிர்ப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள மையால் மீள் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஏனைய மோட்டார் சைக்கிள்கள் கள விற்பனை படையணிக்கு வழங்கப் பட்டுள்ளமையால் ஒரே தினத்தில் அனைத்து மோட்டார் சைக்கிள்களையும் கொழும்பிற்கு கொண்டு வருதல் நடைமுறைச் சிக்கலான விடயம் என்பதனால் மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்க வில்லை. கைதவிர்ப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த காரணத்தால் சொனோட்டா மோட்டார் வாகனத்தை விலைமதிப்பீட்டு திணைக்களத்திற்கு அனுப்பிய வாகனங்களின் பட்டியல்களுக்கு உள்ளடக்கியராத காரணத்தால் மீள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டியமை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 1.3.3 ஆம் பந்தி | ஏற்பாடுகளின் பிரகாரம் 3 வாகன தொகுதிகளின் வகைப்படுத்தப்பட்டு மோட்டார் வாகன திணைக்களத்தின் மோட்டார் வாகன பரிசோதனை உத்தியோகத்தர் ஒருவர் மற்றும் சபையின் நிறைவேற்று தரத்திலான உத்தியோகத்தர் உள்ளடங்கலாக நிறுவன தலைவரினால் நியமிக்கப்பட்ட மூவரடங்கிய குழுவின் மூலம் வாகனங்கள் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். எனினும், அவ்வாறு நடவடிக்கை எடுக்காது மதிப்பீட்டு திணைக்களத்தின் ஊடாக மதிப்பிடப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கின்றேன். 2020 ஆம் ஆண்டினுள் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் ஏனைய அனைத்து மோட்டார் வாகனங்கள் சுற்றறிக்கையின் பிரகாரம் மீள் மதிப்பீடு செய்வதற்கு பணிகள் ஆயத்தப்படுத்தப் பட்டுள்ளன. | நிலவும் சுற்றறிக்கை மற்றும் நிதியல்லாத சொத்துக்களை மதிப்பீடு செய்யும் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| (ஈ) | 2015 யூலை 10 ஆந் திகதிய 02/2015 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 9 ஆம் பந்தியின் (அ) பிரிவு | ஏற்பாடுகளின் பிரகாரம் ஏதேனும் ஒரு வாகனத்தின் பதிவு குறித்து குறித்த நிறுவனத்தின் பெயரில் காணப்படாத சந்தர்ப்பத்தில் அவ்வாறான வாகனங்களின் உரித்தினை நிறுவனத்திற்கு மாற்றியதன் பின்னர் மாத்திரமே கைதவிர்ப்பு நடைமுறை மேற்கொள்ளப்பட வேண்டும். எனினும், விற்பனை முகவர் ஒருவருக்கு வழங்குவதற்காக 2013 ஆம் ஆண்டில் ரூபா 411,500 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த முச்சக்கர வண்டியினை பதிவு செய்யாது 2017 யூலை மாதம் வரையிலும் அவரின் பொறுப்பில் வைத்திருந்த பின்னர் சபைக்கு கொண்டு வந்து கையளிக்கப்பட்டிருந்தது. அது இதுவரையிலும் பதிவு செய்யப்பட்டிராததுடன் 2020 யூன் 29 ஆந் திகதி கைதவிர்ப்பதற்கு விலைக் கேள்வி கோரப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கின்றேன். எதிர்காலத்தில் இவ்வாறான வெகுமதிப் பொருட்களை கொள்வனவு செய்து காட்சிக் கூடங்களுக்கு வழங்காதிருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பது | பதிவு செய்யப்படாத வாகனம் என்பதால் கைதவிர்க்கும் போது சிக்கல்கள் நிலவுகின்ற காரணத்தால் சட்டங்கள், விதிகள் மற்றும் சுற்றறிக்கை களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு பெறுபேறு ரூபா 2,668,792,667 ஆன மிகையொன்றானதுடன் அதனோடு ஒத்த கடந்த வருடத்தின் மிகை ரூபா 2,187,603,956 ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 481,188,711 அல்லது 22 சதவீத அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. கடந்த வருடத்தின் வரிக்கு முன்னரான இலாபத்தின் நிலுவை வருமான வரி உள்ளடங்கலாக ரூபா 553,166,576 அல்லது 20 சதவீத வரி செலவினம் மேற்கொள்ளப் பட்டமையால் அதனை மீளாய்வாண்டின் போது ரூபா 235,073,385 அல்லது 08 சதவீதமாக குறைந்தமைக்கும் இந்த அதிகரிப்பு பிரதானமாக காரணமாக அமைந்திருந்தது.

### 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான மீளாய்வு

மீளாய்வாண்டின் பிரதான வருமான மற்றும் செலவின விடயங்கள் கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) கடந்த வருடத்திற்குஒப்பாக மீளாய்வாண்டின் போது லொத்தர் சீட்டுக்களின் விற்பனை வருமானம் ரூபா 1,210,557,766 இனால் அல்லது 7.6 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. கடந்த வருடத்திற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது 07 லொத்தர் சீட்டுக்களின் விற்பனை அதிகரித்திருந்ததுடன் லக்னவாசனா லொத்தர் சீட்டின் விற்பனை வருமானம் 75 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(ஆ) கடந்த வருடத்திற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது சபையின் ஏனைய வருமானம் ரூபா 7,705,644 இனால் அல்லது 3.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்திருந்தது.

(இ) கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது லொத்தர் சீட்டுக்களின் செலவினம் ரூபா 57,774,472 இனால் அல்லது 14.2 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. இதன் போது 06 லொத்தர் சீட்டுக்களின் விற்பனை செலவினம் அதிகரித்திருந்ததுடன் லக்ன வாசனா லொத்தர் சீட்டின் அச்சீட்டு செலவினத்தின் அதிகரிப்பானது 90.8 சதவீதமாக காணப்பட்டது.

(ஈ) கடந்த வருடத்திற்கு ஒப்பாக நடப்பாண்டின் வெகுமதி செலவினம் ரூபா 607,081,273 இனால் அல்லது 7.3 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. 2019 ஆம் ஆண்டின் போது 07 லொத்தர் சீட்டுக்களின் பரிசில் செலவினம் அதிகரித்திருந்ததுடன் லக்ன வாசனா லொத்தர் சீட்டின் பரிசில் செலவினத்திலான அதிகரிப்பு 75.2 சதவீதமாக காணப்பட்டது.

(உ) கடந்த வருடத்திற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது பகிர்ந்தளிப்புக்கிரயம் ரூபா 268,626,423 இனால் அல்லது 6.7 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. அந்த அதிகரிப்பிற்கு விற்பனையுடன் சார்ந்த கிரயம் ரூபா 28,850,334 இனால் அல்லது 190.3 சதவீதத்தினால் ஆன அதிகரிப்பும், விற்பனை பிரதிநிதிகளின் தரகு ரூபா 310,479,817 இனால் அல்லது 10.7 சதவீதத்தால் அதிகரித்தமை மற்றும் பகிர்ந்தளிப்பு தரகு ரூபா 16,023,158 இனால் அல்லது 7.8 சதவீதத்தினால் அதிகரித்தமை ஆகியன தாக்கமளித்திருந்தது.

(ஊ) கடந்த வருடத்திற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் சபையின் நிர்வாக செலவினம் 17 சதவீதத்தினால் அல்லது ரூபா 78,180,497 இனால் அதிகரித்திருந்தது. இதன் அதிகரித்த அளவின் ரூபா 33,546,676 தொகை ஊழியர் பணிக்கொடையினை பிரதிநிதித்துவப்படுத்துவதுடன் அதன் அதிகரிப்பானது அந்த வருடத்திற்கு ஒப்பாக 12 ஆகும். அதற்கு மேலதிகமாக நிர்வாக செலவினத்தின் அதிகரிப்பிற்கு மென்பொருள் பராமரிப்பு செலவினத்தின் ரூபா 1,314,800 அல்லது 11 சதவீதம் அதிகரித்தமையும் மருத்துவ செலவினம் மற்றும் மருத்துவமனை கட்டண

செலவினத்தின் 35 சதவீதம் அல்லது ரூபா 9,440,856 இனால் அதிகரித்தமையும் பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

மீளாய்வாண்டு மற்றும் கடந்த வருடத்தல் சபையில் செயற்பாடு, இலாபத்தன்மை, திரவத்தன்மை ஆகியவற்றை காண்பிக்கும் விகிதங்கள் தொடர்பான பகுப்பாய்வொன்று கீழே தரப்பட்டுள்ளது.

| | 2019 | 2018 |
|---|---|---|
| **செயற்பாடுகள்** | சதவீதம் | சதவீதம் |
| விற்பனை வருமானத்திற்கு விற்பனை மற்றும் விநியோகச் செலவினம் | 25 | 25 |
| விற்பனை வருமானத்திற்கு விற்பனைக் கிரயம் | 58 | 58 |
| **இலாபத்தன்மை விகிதம்** | | |
| மொத்த இலாப விகிதம் | 42 | 42 |
| தேறிய இலாப விகிதம் | 16 | 14 |
| விற்பனை மற்றும் விநியோக செலவினம் மொத்த நிர்வாக செலவினத்தின் சதவீதமாக | 89 | 89 |
| தேறிய இலாபத்தில் வெகுமதிகளை ஒப்படைக்கும் சதவீதம் | 13 | 17 |
| தேறிய இலாபத்திற்கு வருமான வரி விகிதம் | 9 | 25 |
| **திரவத்தன்மை விகிதங்கள்** | | |
| நடைமுறை விகிதம் | 1:1.63 | 1:1.37 |
| விரைவு விகிதம் | 1:1.60 | 1:1.31 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கடந்த வருடத்தில் மற்றும் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட விற்பனை மற்றும் விநியோகச் செலவினம், விற்பனை விலையின் 25 சதவீதமாக காணப்பட்டது. எனினும் கடந்த வருடத்தில் மற்றும் மீளாய்வாண்டின் போது விற்பனை மற்றும் விநியோகச் செலவின விகிதம் மொத்த செயற்பாட்டு செலவினத்தின் சதவீதமாக 89 சதவீதம் எனும் உயர்வான பெறுமதியை கொண்டிருந்தது. இதுவரை அதிக கிரயமொன்றினை மேற்கொள்கின்றமையால் அது சபையின் தேறிய வருமானத்திற்கு நேரடியாக தாக்கம் செலுத்துவதுடன் சனாதிபதி நிதியத்திற்கு மேற்கொள்ளப்படும் பங்களிப்பிற்கும் பாதகமாக தாக்கமளித்துள்ளமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) சபையினால் மீளாய்வாண்டின் போது ஈட்டப்பட்டுள்ள தேறிய இலாபத்தில் 13 சதவீதம் நுகர்வோருக்கு வழங்க வேண்டிய பரிசுகளை மீள பெற்றுக் கொண்டமை மூலம் கிடைத்த அளவினையே பிரதிநிதித்துவப்படுத்தியது. இந்த சதவீதம் கடந்த வருடத்தில் 17 சதவீதமாக காணப்பட்டதுடன் தேறிய வருமானத்திற்கு வருமான வரி விகிதம் 25 சதவீதம் முதல் 09 சதவீதம் வரையான குறைந்த பெறுமதியினை கொண்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) கடந்த வருடத்திற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் லொத்தர் சீட்டு விற்பனை வருமானம் ரூபா 1,210,557,766 அல்லது 8 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தமைக்கு ஒப்பாக விற்பனைக் கிரயம் ரூபா 673,451,784 இனால் அல்லது 7 சதவீதத்தினால் குறைவடைந்தமை தேறிய இலாப விகிதம் 42 சதவீதத்தினால் ஒத்த மட்டத்தில் நிலவியமை தொடர்பில் தாக்கம் செலுத்தியிருந்தது.

(ஈ) கடந்த வருடம் மற்றும் மீளாய்வாண்டின் போது நடைமுறை விகிதம் முறையே 1.37 மற்றும் 1.63 ஆன பெறுமதியினை கொண்டிருந்தது. அதன் பிரகாரம் சபையின் நடைமுறை சொத்துக்கள் விகிதம் உயர்வான மட்டத்தில் காணப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டமையால் மீளாய்வாண்டின் போதும் செயற்படு மூலதன முகாமைத்துவம் தொடர்பில் சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| விளம்பர மூலோபாயமொன்றாக சபையின் அலுவலக வளாகத்தில் LED அறிவிப்பு பலகைகளை நிர்மாணித்து பொருத்தும் பணிக்காக ஒளிர்வு பலகை சித்திர வேலைக்காக (Art Work and Production) ஆகியவற்றுக்காக தனியார் நிறுவனம் ஒன்றினால் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டு ரூபா 952,000 ஆன தொகை குறித்த வழங்குனருக்கு செலுத்தப்பட்டிருந்தது. எனினும், மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள வாறு இந்த சித்திர வேலை இடம்பெற்றிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. மேலும் அறிவித்தல் பலகையை பொருத்தியுள்ள இட அமைவின் அடிப்படையில் அது பொது மக்களின் பார்வைக்கு படாத இடத்தில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | சபையின் சமூக பொறுப்பு மற்றும் லொத்தர் சீட்டின் பெயர் தொடர்பில் அறிவூட்டுவதற்கு இந்த விளம்பர பலகை பயன்படுத்தப் பட்டுள்ளமை மற்றும் சித்திர வேலைகளை மேற்கொள்ளும் அந்த சந்தர்ப்பத்தில் வேறுபாடுகள் இடம்பெற்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. புகைப்படங்களை கொள்வனவு செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட கிரயமும் மேலதிக வல்லுனர்களுக்காக செலுத்தப்பட்ட செலவினமும், இணையத்தளத்தில் தரவிறக்கம் செய்யப்பட்டும் புகைப்படங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட சில செலவினங்களும் சபையின் இணக்கப்பாட்டுடன் இரு தடவைகள் மேற்கொள்வதற்கு நேர்ந்த செலவினங்களும் இதில் உள்ளடங்கியுள்ளது. | சமர்ப்பிக்கப்பட்டுள்ள மதிப்பீடுகளின் பிரகாரம் செயற்பட்டு உள்ளதா என்பதை பரிசோதித்து கொடுப்பனவுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

### 3.2 போதியளவு அதிகாரத்தினால் அதிகாரமளிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சபையின் முகாமைத்துவ உதவி பதவியணியின் 146 அங்கத்தவர்களுக்காக 2016, 2017, 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கான சீருடை படிகளாக வருடமொன்றிற்கு ரூபா 5,000 படி ரூபா 2,175,000 செலுத்தப்பட்டிருந்தது. எனினும், 2016 செப்டம்பர் 01 ஆந் திகதிய அமைச்சரவை செயலாளரின் MF1/05/01/DLB/04 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் முகாமைத்துவ உதவி உத்தியோகத்தர்களின் பதவியின் தன்மையின் அடிப்படையில் அவர்களுக்கு சீருடை வழங்கும் தேவைப்பாடு காணப்படவில்லை என சபையின் தலைவருக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2016 முதல் 2018 ஆம் ஆண்டு வரையிலும் சீருடை படிகளை செலுத்துதல் இடைநிறுத்தப்பட்டிருந்தது. மீண்டும் சபையின் கோரிக்கையின் அடிப்படையில் பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தால் 2019 சனவரி 07 ஆந் திகதி இந்த சீருடை படிகளை எதிர்காலத்திலும் வழங்குவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள போதிலும் கடந்த மூன்று வருடங்களுக்காக அந்த படியினை செலுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்படவில்லை. அதன் பிரகாரம் 2016 ஆம் ஆண்டு முதல் 2018 ஆம் ஆண்டு வரை மீளாய்வாண்டினுள் செலுத்தப்பட்ட சீருடை படியான ரூபா 1,540,000 ஆன தொகை அங்கீகாரமின்றி செலுத்தப்பட்டிருந்தது. | 2019.01.07 ஆந் திகதிய PE/TR/DLB/Gen/2018 ஆம் இலக்க கடிதத்தின் ஊடாக அங்கீகாரம் வழங்கும் போது தற்போது செலுத்தப்படுகின்றமையால் அதற்காக இணக்கப்பாடு வழங்கப்பட்டுள்ளது. எனவே, 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளுக்காக தொழில்சார் சங்கங்கள், தலைவருடன் மேற்கொண்ட கலந்துரையாடலில் முன்வைக்கப்பட்ட கோரிக்கையின் பிரகாரம் இந்த கொடுப்பனவுகள் செலுத்தப்பட்டுள்ளன என்பது. | முறையான அங்கீகாரத்தின் கீழ் படிகளை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

### 3.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையினால் 2008 ஆம் ஆண்டின் போது ரூபா 8,095,000 பெறுமதியான கெப் வாகனமொன்று கடன் அடிப்படையில் முகவர் நிறுவனமொன்றிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் அது சபையின் பெயரில் பதிவு செய்யப்பட்டு பின்னர் முன்னாள் தலைவரினால் எடுத்துச் செல்லப்பட்டிருந்தது. இந்த வாகனத்தின் பெறுமதி சபையினால் செலுத்தப்படாத காரணத்தால் 2012 ஆம் ஆண்டின் போது சபைக்கு எதிராக குறித்த கம்பனி வழக்கு தொடர்ந்திருந்தது. அந்த வழக்கு 2018 நவம்பர் 16 ஆந் திகதி நிறைவு செய்யப்பட்டிருந்ததுடன் வாகனத்தின் பெறுமதி, சட்ட ரீதியான வட்டி மற்றும் வழக்கு கட்டணம் ஆக ரூபா 18,834,979 செலுத்த சபைக்கு விதிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் அவற்றுள் ரூபா 14,923,369 தொகை 2019 ஒக்தோபர் 14 ஆந் திகதி செலுத்தப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்கின்றேன். இதன் காரணமாக நிறுவனத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை குறித்த நபரிடம் அறவிடுவதற்கு சட்டரீதியான பணிகள் மேற்கொள்ளப் படுகின்றன என்பது. | உரிய முறையில் குறித்த பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்தல். |

### 3.4 தொழிற்பாட்டு செயற்திறனின்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2018 திசெம்பர் 31 ஆந் திகதி சீட்டிழுக்கப்பட்ட ‘‘அத கோதிபதி’’ விசேட லொத்தர் சீட்டுக்கள் 100,000 எண்ணிக்கையானவை NB/8153 ஆம் இலக்கமுடைய வாகனத்தின் மூலம் விற்பனை செய்வதற்காக 5 அலுவலக பதவியணியினர் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அவற்றுள் ரூபா 300,000 ஆன வருமானம் மற்றும் ரூபா 163,750 ஆன | ஏற்றுக் கொள்ள முடியாது. இந்த நிகழ்ச்சித் திட்டங்களில் விற்பனைஇலக்குகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் பிரதான நோக்கமாக சபையின் வியாபார குறியினை மக்களிடையே பிரபல்யப்படுத்துவது ஆகும். மேலும் விசேட வெகுமதிகள் குறித்த பிரதேசங்களின் | முறையான விற்பனை மூலோபாயங்கள் பயன்படுத்தப்பட்டு விற்பனையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| | இலாபத்தினை ஈட்டுவதற்கு சபை திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 16 நாட்களினுள் 5 பேரினால் 24,000 லொத்தர் சீட்டுக்கள் மாத்திரம் விற்பனை செய்யப்பட்டமையால் ஈட்டிய இலாபம் ரூபா 72,000 மாத்திரம் ஆகும். எனினும் அதற்காக செலவிட நேர்ந்த செலவினமானது ரூபா 254,250 ஆனமையால் ரூபா 182,250 ஆன நட்டம் சபையின் நிதியத்தின் ஊடாக மேற்கொள்ள நேர்ந்திருந்தது. | மக்களுக்கு அறிவுறுத்தலும் இதன் பிரதான நோக்கமொன்று ஆகும். | |
| (ஆ) | அபிவிருத்தி லொத்தர் சபையின் உயர் முகாமைத்துவத்தினால் எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்களின் பிரகாரம் பொதுவான முறைமையின் கீழ் லொத்தர் சீட்டுக்களை கடனுக்கு விற்பனை செய்யும் போது குறித்த கடன் தொகை அதற்கு அடுத்த தினம் தீர்க்கப்பட வேண்டியதுடன் அவ்வாறு செலுத்தப்படாத சந்தர்ப்பத்தில் குறித்த விற்பனை முகவருக்கு மீளவும் லொத்தர் சீட்டுக்களை விநியோகித்தல் நிறுத்தப்படும். எனினும், 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக 08 முதல் 27 மாதங்கள் வரையான காலமாக 05 விற்பனை முகவர்களுக்கு ரூபா 2,660,369 ஆன தொகை அறவிடப்படாது காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. | உயர் முகாமைத்துவத்தினால் எடுக்கப்பட்டுள்ள தீர்மானங்கள் உரிய முறையில் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| (இ) | சபையினால் சுப்பர் போல் லொத்தர் சீட்டின் 914 ஆம் சீட்டிழுப்பு மற்றும் சனிதா வாசனா லொத்தர் சீட்டின் 3125 ஆம் சீட்டிழுப்பின் விசேட சீட்டிழுப்புக்களாக நடாத்தப்பட்டிருந்தன. இதன் போது 12 சந்தர்ப்பங்களில் | ஏற்றுக் கொள்ள முடியாது. இவ்வாறான நிகழ்ச்சித் திட்டங்களில் விற்பனை மேம்படுத்தல் மற்றும் லொத்தர் சீட்டு தொடர்பில் மக்களுக்கு அறிவூட்டுதல் | முறையான விற்பனை மூலோபாயங்களை பயன்படுத்தி விற்பனை மேம்படுத்தல் மற்றும் விற்பனையை அதிகரித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

வாகனங்களை ஈடுபடுத்தி 153 மனித நாட்களினுள் 18,800 சுப்பர் போல் டிக்கட்டுக்கள் 07 சந்தர்ப்பங்களில் 74 மனித நாட்களை பயன்படுத்தி 21,400 சனிதா வாசனா டிக்கட்டுக்கள் விற்பனை செய்யப்பட்டிருந்தன. இந்த இரு லொத்தர் சீட்டுக்களையும் விற்பனை செய்வதற்கு பங்குபற்றிய பதவியணியினருக்கு சம்பளத்திற்கு மேலாக தங்கியிருத்தல் படிகள், மேலதிக நேர படிகள் மற்றும் எரிபொருள் செலவினமாக ரூபா 305,582 ஆன தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் மனித நாளொன்றிகு சுப்பர் போல் டிக்கட்டுக்கள் 10 சனிதா வாசனா டிக்கட்டுக்கள் (மனித நாளொன்றிற்கு) 41 எனுமாறு விற்பனை செய்யப்பட்டிருந்தது.

எதிர்பார்க்கப்படுவதுடன் விற்பனை மேம்படுத்தலில் லொத்தர் சீட்டுக்களை விற்பனை செய்ய வேண்டிய காரணத்தால் அதற்காக பங்குபற்றும் பதவியணியினருக்கு விற்பனை இலக்குகள் வழங்கப்பட்டுள்ளன. விசேட சீட்டிழுப்புக்கள் தொடர்பில் மக்களை அறிவூட்டுதல் மூலம் வழங்கப்படும் மேலதிக வெகுமதிகள் தொடர்பிலும் மக்களுக்கு அறிவூட்டுதல் இதன் பிரதான நோக்கமாகும்.

(ஈ) 2018 ஆகஸ்ட் 28 ஆந் திகதி முதல் செப்தெம்பர் 01 ஆந் திகதி வரையிலும் மொனராகல பிரதேசத்தில் நடாத்தப்பட்ட என்ரபிரைசஸ் ஸ்ரீலங்கா கண்காட்சிக்காக சபையினால் ரூபா 3,325,821 ஆன செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்த துடன் விற்பனை இலக்கில் 41 சதவீதமான ரூபா 4,100,000 ஆன விற்பனை வருமானம் பெறப்பட்டிருந்தது. எனினும், லொத்தர் சீட்டொன்றின் சராசரி விற்பனை செலவினம் ரூபா 3.50 ஆன போதிலும் இந்த கண்காட்சி வளாகத்தினுள் விற்பனை செய்யும் போது அது ரூபா 16.22 வரை அதிகரித்திருந்தமையால் பொதுவான விற்பனை செயற்பாட்டின் மூலம் ஈட்டும் வருமானத்தை விட ரூபா

ஏற்றுக் கொள்ள முடியாது. இது தொடர்பில் செலவினத் தலைப்பில் பணிப்பாளர் சபைக்கு அனுப்பி அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப் பட்டுள்ளதுடன் அந்த பணிகளை ஒழுங்கமைத்த பதவியணிக்கு மேற்கொண்ட செலவினம் மற்றும் விற்பனை ஆகியவற்றை ஒப்பிடுதல் நடைமுறைக்கு பொருத்தமற்றதாகும். நிதி அமைச்சின் அறிவுரையின் அடிப்படையில் ஏனைய அரச நிறுவனங்கள் மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபையும் அனுசரணையாளர்

வர்த்தக விளம்பரங்கள் மற்றும் ஏனைய விளம்பரங்களுக்காக இன்றளவிலும் பாரிய செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டுள்ள துடன் வருமானம் மற்றும் விற்பனை இலக்குகளின் மூலம் விற்பனையை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை.

| | | | |
|---|---|---|---|
| | 2,607,000 இனால் சபையில் இலாபம் குறைவடைந்திருந்தது. | களாக இந்த கண்காட்சியில் பங்குபற்றியுள்ளனர். இதன் அடிப்படை நோக்கமானது அபிவிருத்தி லொத்தர் சபையின் வியாபார பெயரினை கண்காட்சியினை பார்வையிட வரும் மக்களிடையே பிரபல்யப்படுத்துவது ஆகும். | |
| (ஊ) | 2019 ஆம் ஆண்டில் சபையில் அச்சீட்டு செலவினம் ரூபா 424,023,033 ஆக காணப்பட்டதுடன் விற்பனை செய்யப்படாத எஞ்சியிருந்த லொத்தர் சீட்டுக்களின் அச்சீட்டு செலவினம் ரூபா 31,812,417 ஆகும். இதன் பிரகாரம் எஞ்சிய லொத்தர் சீட்டுக்களின் விற்பனை செலவினம் மொத்த அச்சீட்டு செலவினத்தின் சதவீதமாக 7.5 சதவீதம் ஆகும். இந்த எஞ்சிய லொத்தர் சீட்டுக்களின் அச்சீட்டு செலவினம் மொத்த அச்சீட்டு செலவினத்தின் சுமார் 5 சதவீதமான மட்டத்தில் பேணுதல் தொடர்பில் கணக்காய்வு ஐயவினாக்களின் மூலம் சபைக்கு அறிவித்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது அது நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் காரணமாக இது முகாமைத்துவத்தின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட நிலைமை என்பதால் விற்பனை செய்யாது எஞ்சியிருந்த இருப்பின் பெறுமதி உயர்வான சதவீதத்தினை கொண்டிருந்தது. | எஞ்சிய லொத்தர் சீட்டுக்களின் அச்சீட்டு மொத்த செலவினத்தின் 5 சதவீதம் எனும் மட்டத்தில் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

## 3.5 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| விற்பனை மேம்படுத்தல் பணிகளுக்கு இணைந்ததாக மேற்கொள்ளும் நிகழ்ச்சித் திட்டங்களில் பயன்படுத்துவதற்காக மாவட்டத்திற்கு 10 எனும் படி 250 | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. கொடிக் கம்பங்களை பாதுகாப்பான முறையில் | தேவைப்பாடு உரிய முறையில் மதிப்பிடப்பட்டு பொருத்தமான நடைமுறைகளை |

| | | |
|---|---|---|
| கொடிக் கம்பங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 1,000,000 ஆன கிரயம் சபையினால் 2018 ஆம் ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறு கொள்வனவு செய்யப்பட்ட கொடிக் கம்பங்களில் இருப்பு சபையினுள் மிகவும் பாதுகாப்பற்ற முறையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்ததுடன் கொள்வனவு செய்யப்பட்ட திகதி முதல் அவை எவ்வித விற்பனை மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்திற்கும் பயன்படுத்தப்பட்டிருக்க வில்லை. | களஞ்சியப்படுத்து வதற்கு உரிய இடமொன்று ஒதுக்கப்பட்டுள்ளது என்பதும் மேம்படுத்தல் சந்தர்ப்பங்களில் இந்த கொடிக் கம்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. | பின்பற்றி குறித்த உருப்படிகளை கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

## 3.6 பெறுகையிலான தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **விற்பனை மேம்படுத்தல் வாகனத்தை தயார்ப்படுத்தல்** | | |
| 2018 ஆம் ஆண்டின் போது ரூபா 5,565,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட Rear Body இல்லாத Double Wheel க்ரு கெப் வண்டி விற்பனை மேம்படுத்தல் வாகனமாக தயார்ப்படுத்துவதற்கு 2018 ஒக்தோபர் 18 ஆந் திகதி U-Sri நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் 2020 யூன் 30 ஆந் திகதி வரையிலம் 01 வருடமும் 08 மாதங்கள் கடந்துள்ள போதிலும் லொறியொன்றின் உடற்பாகத்தின் உடற்பாகம் பொருத்தப்பட்டு வெளிப்புற கவசத்தை விடுதல் மற்றும் பின்புற கதவுகளை பொருத்துதல் மாத்திரம் இடம்பெற்றிருந்தது. விற்பனை மேம்படுத்தல் வாகனமொன்றை கொள்வனவு செய்வதற்காக ரூபா 10.2 மில்லியன் நிதியேற்பாடு உள்ளபோது லொத்தர் சீட்டுக்களை கொண்டு செல்வதற்காக கொள்வனவு செய்யப்பட்ட வாகனமொன்று இவ்வாறு அவசரமாக விற்பனை வாகனமாக மாற்றியமைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகளை கருத்திற் கொள்ளாது அமைப்புக் குறிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு கூறுவிலைகள் | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. இது பல்வேறு கட்டங்களின் கீழ் நிறைவேற்றப்பட்டுள்ள துடன் ஒவ்வொரு கட்டங்களின் கீழும் இடம்பெற்ற பல்வேறு தாமதங்களின் காரணமாக இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. இந்த வண்டி 2020 ஆகஸ்ட் மாதம் 15 ஆந் திகதி பூர்த்தி செய்வதற்கு உத்தேசிக்கப் பட்டுள்ளது. | தேசிய பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டியமை மற்றும் இது தொடர்பில் உயர் முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட வேண்டியமை. |

கோரப்பட்டிருந்ததுடன் 2009 இன் 08 ஆம் இலக்க மோட்டார் வாகன (திருத்தப்பட்ட) அதிகாரச்சட்டத்தின் 6(1) பிரிவின் ஏற்பாடுகளுக்கு முரணாக வாகனத்தின் அளவினையும் மாற்றும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. மேலும், இந்தப் பணிக்காக கொள்வனவு செய்யப்பட்ட பொருட்களின் ஒரு வருட உத்தரவாத காலத்தில் 8 மாதங்கள் பூர்த்தியடைந்திருந்தமை, சொத்துக்கள் மற்றும் அதன் உதிரிப்பாகங்களின் பாதுகாப்பு தொடர்பில் கவனம் செலுத்தாமை, வாகனங்களை பதிவு செய்வதில் அபாயமொன்று நிலவுகின்றமை மற்றும் செயலாற்றல் பிணைகளின் செல்லுபடியான காலம் கடந்திருந்தமை போன்ற விடயங்களின் அடிப்படையில் ரூபா 12,670,000 ஆன கிரயத்தினை மேற்கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள இந்த செயற்பாட்டு நடைமுறை நிதிக் கூற்றுக்களில் உரிய கணக்குகளில் வெளிப்படுத்துவதில் சிக்கல் உருவாகியுள்ளமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

### 3.7 பெறுகைகள் வழிகாட்டிக் கோவையிலிருந்து விலகுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பெறுகைகள் திட்டம் | | |
| 2006 ஆம் பெறுகைகள் வழிகாட்டி கோவையின் நாலாம் அத்தியாயத்தின் 4.2.1 ஆம் பந்தியின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள மாதிரிக்கமைய பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் சபையின் மீளாய்வாண்டிற்கான பெறுகைகள் திட்டம் அமைச்சின் செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்டிருக்க வில்லை. | 2019 ஆம் ஆண்டிற்கான பெறுகைகள் திட்டத்தில் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது என்பதும் ஒவ்வொரு வருடத்தினதும் பெறுகைகள் திட்டம் அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்படும் போதும் அங்கீகாரம் கிடைத்திருக்கவில்லை என்பது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| **(ஆ)** | **லொத்தர் அச்சீட்டு நிறுவனங்களை தெரிவு செய்தல்** | | |
| | ---------------------------------------------- | | |
| (i) | 2013 சனவரி 02 ஆந் திகதிய 01/2013 ஆம் இலக்க மற்றும் 2017 ஒக்தோபர் 09 ஆந் திகதிய 4 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கை, 2006 தேசிய பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 7.6.7, 7.7.1(அ), 795(இ), 796(ஆ)(iii), 8.5.1(அ) மற்றும் (ஆ) வழிகாட்டிகள் மற்றும் 2008 திசெம்பர் 17 அந் திகதிய அமப/08/2356/036/145/TBR ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனம் ஆகியவற்றின் ஏற்பாடுகளின் பிரகாரம் வழங்குனர்கள் தெரிவு செய்யப்பட வேண்டிய போதிலும், லொத்தர் சீட்டுக்களின் அச்சீட்டு நிறுவனங்களை தெரிவு செய்யும் போது அதன் பிரகாரம் செயற்படாத சந்தர்ப்பங்கள் சில அவதானிக்கப்பட்டன. அவை பின்வருமாறு. | இது தொடர்பில் விரிவான பதிலொன்று வழங்கப்பட்டுள்ள போதிலும் அந்த பதில் கணக்காய்வினால் ஏற்றுக் கொள்ளப்பட வில்லை என்பது புலப்படுகின்றது. அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம் பொருத்தமான பெறுகை நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளது. குறித்த சுற்றறிக்கைகள் மற்றும் பெறுகைகள் வழிகாட்டி கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் ‘‘உள்நாட்டு முன்னுரிமை’’ லொத்தர் சீட்டுக்களின் அச்சீட்டுப் பணிக்காக அடிப்படையாக கொள்ள முடியாது. | அரச பெறுகைகள் மற்றும் வழிகாட்டிக் கோவை மற்றும் சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டியமை. |
| - | அரச நிதித் திணைக்களத்தின் இணக்கப்பாடின்றி பெறுகைகள் அளவுக் கோல்கள் உள்ளடக்கப்பட்ட பெறுகை ஆவணம் தயாரிக்கப்பட்டமையால் சபைக்கு நலன்ஏற்படும் விதத்திலான அச்சீட்டு நிறுவனம் பெறுகை நடைமுறையில் இருந்து அகற்றப்பட்டமை. | | |
| - | அமைச்சின் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவின் அளவுகோல்களின் பிரகாரம் அமையாத நிறுவனங்களும் விலைக்கேள்வி மதிப்பீட்டிற்காக தெரிவு செய்யப்படல் | | |
| - | பதில் வழங்கியிராத விலைக் கேள்வியாளர்கள் மதிப்பீட்டிற்காக தெரிவு செய்யப்படல். | | |
| (ii) | பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 8.5, 8.5.1(அ)(ஆ)(இ)(ஈ) ஏற்பாடுகள் கவனத்தில் கொள்ளப்படாது | - மேற்படி - | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு |

| | | | |
|---|---|---|---|
| | அமைச்சின் பெறுகைகள் குழுவின் தீர்மானம் மேன்முறையீட்டு விலைக்கேள்வியாளர் களுக்கு அறிவிக்கும் போது மேன்முறையீட்டுக்கு போதுமான காலம் வழங்கப்படாமை மற்றும் மேன்முறையீடுகள் நிராகரிக்கப்பட்டமை. | | இணங்க நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |
| (iii) | சபையின் தலைவர், அமைச்சின் பெறுகைகள் குழுவின் உறுப்பினராக காணப்படுவதுடன் பிரதி பொது முகாமையாளர் (நிதி) அமைச்சின் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் உறுப்பினர் ஆவார். இந்த விடயத்திற்கு பொறுப்பாக செயற்படும் பிரதி பொது முகாமையாளர் (நிதி) மற்றும் உதவி பொது முகாமையாளர் (நிதி) இனால் அச்சீட்டு வழுவொன்று தொடர்பில் அறிந்திருந்த போது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையின் பிரகாரம் அச்சீட்டுப் பணிகள் தொடர்பில் குறைபாடுகள் எதுவும் இல்லை என அறிக்கையிடல் மற்றும் இரு வழங்குனர்கள் தொடர்பில் திருப்தி கொள்ள முடியும் என அறிக்கையிடப்பட்டிருந்தமை. | ஆகக்குறைந்த கூறு விலைகளுடனான விலைக் கேள்வியாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளமையும் தகுதியினை பெற்றிராத விலைக்கேள்வியாளர் களிடமிருந்து கிடைத்த கூறுவிலைகளுக்கு ஒப்பாக ஒப்பந்தம் கையளிக்கப்பட்ட கூறுவிலையினை ஒப்பிட்டு நட்டமொன்று ஏற்பட்டுள்ளமையை வெளிப்படுத்த முடியாது என சுட்டிக் காண்பிக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |
| (iv) | 2018 மார்ச் 25 ஆந் திகதி சீட்டிழுக்கப்பட்ட கோதிபதி சனிதா 271 ஆம் சீட்டிழுப்பிற்கு உரிய லொத்தர் சீட்டுக்களில் தவறான பரிசு கோலமொன்று அச்சிடப்பட்டிருந்தமை அடிப்படையில் ரூபா 320,000 ஆன மிகை பரிசில்கள் தொகையினை செலுத்த சபைக்கு நேர்ந்திருந்தமை, உடன்படிக்கையின் பிரகாரம் குறித்த அச்சீட்டு நிறுவனத்திலிருந்து அறவிடப்பட வேண்டிண ரூபா 320,000 ஆன தொகை அறவிடப்பட்டிராமை மற்றும் தவறான தரவுகள் அச்சிடப்பட்டமை ஆகிய காரணங்களால் அறவிடப்பட வேண்டிய ரூபா 500,000 ஆன தொகை அறவிடப்படாமை. | அது ஒரு சிறிய அச்சீட்டு வழுவென குறிப்பிடப்பட்டுள்ளது. | உடன்படிக்கையின் பிரகாரம் அச்சீட்டு நிறுவனத்திலிருந்து அறவிடப்பட வேண்டிய பணத்தினை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| (v) | அமைச்சின் பெறுகைகள் குழுவின் தலைவராக செயற்படும் தரப்பினரால் மேன்முறையீடுகளை கோருவதற்காக தோல்வியடைந்த விலைக் கேள்வியாளர்களுக்கு கடிதங்களை அனுப்புதல், மேன்முறையீட்டு சபையாக செயற்படும் ஒருங்கிணைந்த குழுவின் தலைவராக செயற்பட்டிருந்தமை மற்றும் குழுவின் தீர்மானத்தின் அடிப்படையில் ஒப்பந்தத்தை மீள கையளிப்பதற்காக அங்கீகாரத்தினை வழங்குதல் ஆகிய பணிகளும் இடம்பெற்றிருந்த காரணத்தால் இந்த பெறுகை நடைமுறையில் வெளிப்படு தன்மை தொடர்பில் கணக்காய்வின் போது பிரச்சினைக்குரியதாக இருந்தமை. | கேள்விக்கு உரிய மேன்முறையீட்டு நடைமுறை அமைச்சின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற மையால் அது தொடர்பிலான அபிப்பிராயத்தினை வெளியிட முடியாது என்பது. | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| **(இ)** | **பரிசில்களை கொள்வனவு செய்தல் (ரூபா 2,342,360)**<br>------------------------------------------------------- | | |
| (i) | சுப்பர் போல் விசேட லொத்தர் சீட்டின் பரிசாக வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த 20 கைத்தொலைபேசி களுக்காக ரூபா 672,860 ஆன தொகை ஒதுக்கப்பட்டிருந்ததுடன் இந்த கொள்வனவு பெறுகைகள் நடைமுறைக்கு புறம்பாக இடம்பெற்றிருந்தது. | ஏற்றுக் கொள்ள முடியாது. போட்டி அடிப்படையிலான கூறு விலைகள் கோரப்பட்டு தலைவரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் இந்த கொள்வனவு இடம்பெற்றுள்ளது என்பது. | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| (ii) | பெறுகைகள் வழிகாட்டி கோவையின் 8.9.1 ஆம் அத்தியாயத்தின் (ஆ) பிரிவின் பிரகாரம் ரூபா 500,000 தொகையினை மிஞ்சும் பொருட்களை கொள்வனவு செய்யும் போது முறையான உடன்படிக்கை பிரகாரம் செயற்பட வேண்டிய போதிலும் கோதிபதி விசேட சீட்டிழுப்பிற்காக ரூபா 1,669,500 பெறுமதியான மோட்டார் சைக்கிள்கள் கொள்வனவு செய்யும் போது உடன்படிக்கை ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. குறித்த விடயங்கள் எவ்வித பிரச்சினைகளும் இல்லாத வகையில் இடம்பெற்றுள்ளதுடன் சர்ச்சையொன்று ஏற்பட்டிருக்கவில்லை என்பது. | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

| | | |
|---|---|---|
| **(ஈ) குடிநீர் போத்தல்களை கொள்வனவு செய்தல் (ரூபா 1,911,663)** | | |
| சபையினால் முறையான பெறுகைகள் நடைமுறையினை பின்பற்றாது குடிநீர் போத்தல்களை கொள்வனவு செய்வதற்காக 2016 ஆம் ஆண்டின் போது நிறுவனமொன்று தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டின் கணக்காய்வு திகதி வரை அந்த நிறுவனத்திடமிருந்து மாத்திரம் குடிநீர் போத்தல்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. 2020 ஆம் ஆண்டின் போது திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |
| **(உ) உடனடி லொத்தர் சீட்டுக்களின் விற்பனை மேம்படுத்தல் பணிகளுக்காக ரீசேட்கள் கொள்வனவு செய்தல்** | | |
| களஞ்சியத்தில் போதுமான இருப்பு காணப்படும் போது அது தொடர்பில் கருத்திற் கொள்ளாது மீளவும் கொள்வனவுகள் இடம்பெற்றிருந்தமை, உடனடி லொத்தர் சீட்டுக்கள் பொருத்தமான விற்பனை திட்டமொன்றின் பிரகாரம் இடம்பெறாமை மற்றும் கொள்வனவு செய்யப்பட்ட விற்பனை மேம்படுத்தல் உருப்படிகளுக்காக உடனடி லொத்தர் சீட்டுக்கள் அச்சிடப்பட்டு சந்தையில் விடப்படாமை போன்ற விடயங்களின் காரணமாக லொத்தர் சீட்டுக்களின் விற்பனை மேம்படுத்தலுக்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 9,075,040 பெறுமதியான 17,452 ரீசேட்கள் விளைவற்று காணப்பட்டன. | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. 50 சதவீத வெகுமதி விகித எல்லையின் கீழ் அச்சீட்டாளருக்கு அச்சிடலுக்கு கட்டளை வழங்கப்பட்டது என்பதும். சந்தையில் நிலவும் தளம்பலின் அடிப்படையில் லொத்தர் சீட்டுக்கள் கட்டளையிடப்பட்டு கொண்டு வரப்பட்டமையால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது என்பதும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே, தற்போது இந்த அனைத்து இருப்புக்களும் உடனடி லொத்தர் சீட்டுக்களுடன் விநியோகிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளமை அறிவிக்கப்பட்டுள்ளது. | விற்பனை மேம்படுத்தல் உருப்படிகளை கொள்வனவு செய்யும் போது தற்போது காணப்படும் இருப்பின் மட்டம் கருத்திற் கொள்ளப்பட்டு பொருத்தமான விற்பனை திட்டமொன்றின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| **(ஊ)** | **தீயணைப்பு பாதுகாப்பு கட்டமைப்பினை கொள்வனவு செய்தல்**<br>------------------------------------------------<br>2019 ஆம் ஆண்டினுள் சபையினால் ரூபா 2,357,000 செலவிடப்பட்டு தீயணைப்பு பாதுகாப்பு கட்டமைப்பொன்று நிறுவப்பட்டிருந்ததுடன் இதற்காக 3 சந்தர்ப்பங்களில் கூறுவிலைகள் கோரப்பட்டிருந்தன. இந்த வழங்குனரை தெரிவு செய்யும் பெறுகை நடைமுறைக்காக சபையின் பெறுகைகள் பிரிவின் நேரடியான தலையீடு இடம்பெற்றிராததுடன் வழங்குனர் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் தீயணைப்பு திணைக்களத்தின் பரிந்துரைகள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தன.<br>தீயணைப்பு திணைக்களத்தினால் பரிந்துரைக்கப்பட்ட நிறுவனங்களின் கூறுவிலைகள் கோரப்பட்ட மைக்கான சான்றுகள் காணப்படாததுடன் கூறுவிலைகளை சமர்ப்பித்த இரண்டு நிறுவனங்களில் ஒரு நிறுவனத்தினை இந்த பணிக்காக தெரிவு செய்யப்பட்ட நிறுவனத்தின் துணை கம்பனியொன்றாகும். மேலும், இந்த இரு நிறுவனங்களும் தீயணைப்பு திணைக்களத்தினால் பரிந்துரைக்கப்பட்ட நிறுவனங்கள் அல்ல. | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. தொழில்நுட்ப குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டு பெறுகைகள் குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டு இந்த நிறுவனம் தெரிவு செய்யப்பட்டுள்ளது என்பதும் அந்த நிறுவனத்திலிருந்து இந்த சேவையினை பெற்றுக் கொள்வதற்கு தீயணைப்பு சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. | கொள்வனவு பணிகள் பெறுகைகள் பிரிவின் மூலம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதும் பெறுகைகள் வழிகாட்டி கோவையின் ஏற்பாடுகளுக்கு இணங்க செயற்பட வேண்டியமை. |
| **(எ)** | **LED Light Board கொள்வனவு செய்தல்**<br>---------------------------------------------- | | |
| (i) | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 2.5 மற்றும் 2.6 அத்தியாயங்களின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் பெறுகைகள் குழுவினால் கொள்வனவு தீர்மானம் எடுக்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறல்லாது உதவி பொது முகாமையாளர் (விற்பனை) இனால் ரூபா 1,358,810 பெறுமதியான மேற்படி கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டிய நிறுவனம் தீர்மானிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்ள முடியாது. அந்த சேவை வழங்கும் நிறுவனம் பெறுகை நடைமுறையின் ஊடாக தெரிவு செய்யப்பட்டுள்ள விளம்பர நிறுவனம் என்பதால் ஏனைய விளம்பர பணிகளும் தலைவரின் நிதி அதிகாரத்தின் கீழ் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது என்பது. | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் செயற்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.9.1(ஆ) அத்தியாயத்தின் பிரகாரம் ரூபா 500,000 இற்கு மேற்பட்ட பொருட்கள் மற்றும் சேவைகளை கொள்வனவு செய்யும் போது உடன்படிக்கை யொன்று கைச்சாத்திடப்பட வேண்டிய போதிலும், சபையினால் இந்த பெறுகைகள் உடன்படிக்கையின்றி மேற்கொள்ளப்படடிருந்தன. | அந்த சேவையினை வழங்கும் நிறுவனத்துடன் சபை வருடாந்த உடன்படிக்கை யொன்றுக்கு கைச்சாத்திட்டுள்ள துடன் மேலதிகமாக உடன்படிக்கை யொன்றினை கைச்சாத்திடல் தேவையற்றது என்பது. | அரச பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் செயற்படல் வேண்டும். |

## 3.8 முகாமைத்துவ தொழிற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **(அ)** | **கணனி கட்டமைப்பினை நிறுவுதல்** | | |
| | சபையினால் லொத்தர் சீட்டிழுப்புக்களுக்காக தற்போது பயன்படுத்தப்படும் கணனி மென்பொருள் சேவை தனியார் நிறுவனமொன்றிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படுவதாகும். வருடமொன்றிற்கு ரூபா 6.5 மில்லியன் சம்பளம் மற்றும் படிகள் பெறும் 04 நிறைவேற்று தரத்திலான உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய ரூபா 9 மில்லியன் கூட்டுத் தொகையான சம்பளம் மற்றும் படிகளினை பெறும் 08 உத்தியோகத்தர் களுடனான கணனி பிரிவொன்று சபையினுள் நிறுவப்பட்டிருந்த போதிலும் அவர்களைக் கொண்டு இந்த கணினியுடன் தொடர்புடைய பணி மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. 2009 ஆம் ஆண்டு முதல் 2019 திசெம்பர் 31 வரையான காலப்பகுதியினுள் இந்த தனியார் நிறுவனத்திடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட சேவைக்காக ரூபா 130,607,657 செலுத்தப்பட்டிருந்தது. | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. பெறுகைகள் நடைமுறை நடைமுறைப்படுத்தப் படுகின்றது. | லொத்தர் சீட்டிழுப்பின் போது கணனி மயப்படுத்தப்பட்ட கட்டமைப்பினை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

| | | |
|---|---|---|
| **(ஆ) சபைக்கு சொந்தமான பணம் வெளிவாரி தரப்பினரின் கையிருப்பில் காணப்படல்**<br>-----------------------------------------------<br>2019 ஆம் ஆண்டின் சனவரி மாதம் முதல் செப்தெம்பர் மாதம் வரையான காலப்பகுதிக்கு உரியதாக 1 முதல் 187 நாட்களுக்கு இடைப்பட்ட காலமாக லொத்தர் விநியோகத்தர் களால் தீர்க்கப்படாது நிறுத்தி வைக்கப்பட்டுள்ள ரூபா 1,638,032,144 தொகை காணப்பட்டது. குறித்த பணத்தை துரிதமாக சபைக்கு பெற்றுக் கொள்வதற்கு முகாமைத்துவத்தினால் பொருத்தமான வேலைத் திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டிருக்க வில்லை. | ஒவ்வொரு நாளும் செலுத்தப்படும் பணத்தை உரிய முறையில் பெற்றுக் கொள்வதற்கும் பின் தொடர்வதற்கும் நடைமுறையொன்று ஆரம்பிக்கப்பட்டள்ளது என்பது. | தீர்க்கப்படாத பணத்தை துரிதமாக பெற்றுக் கொள்வதற்கு பொருத்தமான வேலைத்திட்டமொன்று முகாமைத்துவத்தினால் தயாரிக்கப்பட வேண்டியமை. |
| **(இ) சபைக்கான செயல் வழிக் கோவையொன்று தயாரிக்கப்படல்**<br>-----------------------------------------------<br>அபிவிருத்தி லொத்தர் சபை ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் நிர்வாக மற்றும் செயற்பாட்டு பணிகளுடன் தொடர்புடைய செயல் வழிக் கோவையொன்று தயாரிக்கப்பட்டிராததுடன் அந்த பணிக்காக 2016 ஆம் ஆண்டின் போது தகுதி பெற்ற நபரொருவர் நியமிக்கப்பட்டிருந்தார். குறித்த தரப்பினால் நிலவும் சட்டங்கள் மற்றும் விதிகள் தொடர்பில் ஆராய்ந்து குறித்த செயல் வழிக் கோவை தயாரிக்கப்பட்டு 2019 ஒக்தோபர் 14 ஆந் திகதி அபிவிருத்தி லொத்தர் சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. இந்த பணிக்காக ரூபா 4,500,000 தொகை குறித்த தரப்பினருக்கு செலுத்துவதற்கு இணங்கியிருந்ததுடன் அவற்றுள் ரூபா 1,700,000 இதுவரையிலும் செலுத்தப்பட்டுள்ளது.<br>அவர்களால் குறித்த செயல் வழிக்கோவை இரு பகுதிகளாக சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் சபையில் தற்போது நடைமுறையில் உள்ள முறைமைக்கு இணங்காத | ஏற்றுக் கொள்ள முடியாது. இந்த வரைபினை மீளவும் மீளத் தயாரித்து சமர்ப்பிக்குமாறு வளப் பங்களிப்பாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. வழங்கப்பட்டுள்ள வரைபு, தாபன விதிக் கோவை மற்றும் நிதிப் பிரமாணம் ஆகியவற்றிலிருந்து நகலெடுத்து தயாரிக்கப்பட்டது என்பது பணிப்பாளர் சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டள்ள மையால் சபையின் தேவைப்பாட்டின் பிரகாரம் வரைபினை மீளத் தயாரித்து வழங்குமாறு வளப் பங்களிப்பாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்பது. | சபையின் செயல் வழிக் கோவையினை துரிதமாக தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

வகையில் இந்த செயல் வழிக்கோவை தயாரிக்கப்பட்டள்ளதாக பொருத்தமான காரணங்களை குறிப்பிட்டு எஞ்சிய பணம் செலுத்துதல் இடைநிறுத்தப்பட்டிருந்தது. மேலும் இந்த பணிக்காக கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த "லொத்தர் சீட்டுக்கள் மற்றும் சீட்டிழுப்பு பணிகள், உள்ளக கட்டுப்பாடு மற்றும் கணக்காய்வு பணிகள்" ஆகியவற்றுக்கான விதிகளை தயாரித்தல் எனும் பணிகள் இடைநிறுத்துமாறு சபையினால் அதனை தயாரித்த தரப்பினருக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் குறித்த பணி இதுவரையிலும் நிறைவு செய்யப்பட்டிராததுடன் அதற்காக செலவிடப்பட்ட தொகையானது சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கலொன்றாக அவதானிக்கப்பட்டது. மேலும் இந்த பணிக்காக கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் நிபந்தனைகளை மீறுதல் மற்றும் செலுத்த வேண்டிய எஞ்சிய தொகை தொடர்பில் சட்டரீதியான இடர் ஒன்று காணப்படுகின்றமையும் கணக்காய்வினால் அவதானிக்கப்பட்டது.

## 4. கணக்களிதகைமை மற்றும் நல்லாளுகை

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2003 யூன் 02 ஆந் திகதிய PED/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் நாளதுவரையாக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தின் | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |

பிரதியொன்று அதற்கடுத்த நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு 15 தினங்களுக்கு முன்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும் சபையினால் அது 2019 ஆம் ஆண்டின் மார்ச் 06 ஆந் திகதியே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**4.2 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் 2018 சனவரி 09 ஆந் திகதிய PED/MD/NLB/MO/2018 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டத்தில் செயலாற்றல் அறிக்கைகள் மற்றும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் அறிக்கைகள் காலாண்டு நிறைவடைந்து 30 நாட்களினுள் பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் நான்காவது காலாண்டிற்காக குறித்த அறிக்கை பொது முயற்சிகள் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியமை. |